
# வெள்ளி

செப்டம்பர் '7





ஈழத்து
எழுத்தாளர்களின்
புதிய
படைப்புகளில்
உங்களுக்குப்
பிடித்தது
எது?

வெள்ளி

கட்டுரைப் போட்டி

முடிவு தேதி 20-9-71

(23 ம் பக்கம் பாருங்கள்)

# டாக்டர்

# ஈ. எம். வி.

# நாகநாதன்



தமிழரசுக் கட்சியின் ஆரம்ப கால உறுப்பினர்களுள் ஒருவரான டாக்டர் ஈ. எம். வி நாகநாதன் சில தினங்களுக்கு முன்னால் இயற்கை எய்திவிட்டார்!

இங்கிலாந்தில் படிக்கும் காலத்திலேயே, சுதந்திர உணர்ச்சியால் உந்தப்பட்டு, மொராக்கோ நாட்டு முஸ்லிம் மாணவர்களுடன் சேர்ந்து அந்த நாட்டு விடுதலைக்காக பிரெஞ்சு ஸ்பானிஷ் துருப்புக்களை எதிர்த்துப் போரிட்டுக் குண்டடி பட்ட வீரர் இவர்!

இந்த நாட்டில் தமிழரசுக் கட்சியினர் நடத்திய உரிமைப் போராட்டங்கள் அத்தனையிலும் இவர் மிகவும் தீவிரமாகப் பங்குபற்றியிருக்கிறார்!

1961-ம் ஆண்டில் தமிழரசுக் கட்சியினர் நடத்திய உரிமைப் போராட்டத்தினை, அன்றைய ஆட்சியினர் அவசரகாலச் சட்டத்தினையும், ராணுவத்தினரையும் பயன்படுத்தி நசுக்கியதோடு, தமிழரசுக் கட்சியின் தலைவர்களையும் தொண்டர்களையும் சிறையில் அடைத்திட்ட நேரத்தில், உண்மை நிலையினை பாராளுமன்றத்தின் மூலம் உலகுக்கு உரைத்திட வேண்டும் என்ற ஆவலால் உந்தப்பட்டு, பாதிரி வேடத்தில் இவர் பயணமான நிகழ்ச்சியை எளிதில் மறந்துவிட முடியாது;

மிகவும் தீவிரமான முறையில் தமிழரசுக் கட்சிக்காக இவர் உழைத்து வந்திட்டபோதிலும், தனது குணநலப் பண்புகளால் ஏராளமான சிங்களப் பெருமக்களையும் தனது நண்பர்களாகக் கொண்டிருந்தார்! பண்டார நாயக்கா குடும்பத்தினர்கூட இவருடைய நெருங்கிய நண்பர்கள்தான்! 'சமத்துவ' அடிப்படையில் பெருந்தொகையான சிங்களப் பெருமக்களுடன் நட்புக்கொண்டிருந்த ஒரு சில தமிழ்த் தலைவர்களுள் இவர் குறிப்பிடத் தக்கவர்!

அன்புள்ளங்கொண்ட பல தொண்டர்களால் 'இரும்பு மனிதர்' என்று சிறப்பித்து அழைக்கப்பட்ட இவர், அப்பெயருக்கு ஏற்ப தனது வாழ்க்கையை அமைத்துக்கொண்டார்!

அதுவே இவரது வாழ்வின் சிறப்பு!

---

✣ கோரமான நிறவெறி தாண்டவமாடும் தென்னுபிரிக்கா நாட்டில் கிறிஸ்தவ மதப் புத்தகங்கள் சிலவற்றுக்குக்கூட தடைவிதித்து இருக்கிருர்கள்! "உலக சகோதரத்துவம்", மானிடர் "யாவரும் சமம்" என்ற தத்துவங்களை கிறிஸ்தவ மதப் புத்தகங்கள் பிரச்சாரம் செய்வது தென்னுபிரிக்கா அரசாங்கத்துக்குப் பிடிக்கவில்லை!

✣ கோப்பி குடிப்பவர்களை விட, தேநீர் குடிப்பவர்கள் நிறைய நாட்கள் உயிரோடு இருப்பதாக ஒரு அமெரிக்க விஞ்ஞானி கூறுகிருர்! காரணம் தேநீர் ரத்தக் குழாய்கள் கனமாகாமல் தடுக்கிறதாம்!


✣ அஜித் வடேகரின் தலைமையிலான இந்திய கிரிக்கெட் கோஷ்டியினர் அற்புதமான சாதனையைச் சாதித்து இருக்கிருர்கள்! அண்மையில் இங்கிலாந்தில் நடைபெற்ற கிரிக்கெட் டெஸ்ட் போட்டித் தொடர்களில் இறுதி வெற்றி இந்தியாவுக்குக் கிடைத்து இருக்கிறது. சமீபத்தில்தான் மேற்கிந்திய தீவுகளில் வெற்றிவாகை சூடி இந்தியாவுக்குத் திரும்பியிருந்தார்கள் இந்திய கோஷ்டியினர்! இப்போது இங்கிலாந்துக்கு எதிராகவும் வெற்றி கிடைத்து இருக்கிறது! உண்மையிலேயே இது ஒரு மகத்தான சாதனைதான்! ஆனல் நமது நாட்டில் வெளியாகும் ஆங்கிலப் பத்திரிகைகள், இந்தியாவின் இந்த வெற்றிகளுக்கு, உரிய முக்கியத்துவம் அளித்துச் செய்திகளைப் பிரசுரிக்கவில்லை!

✣ கல்கத்தாவிலிருக்கும் ரிஷிகேஷ் தத்தா என்பவர், "என்னுடைய பெயர் புதிய டெலிபோன் டைரக்டரியில் இருக்கிறது. டெலிபோன் நம்பரும் இருக்கிறது. ஆனுல் நான் கேட்டிருந்த டெலிபோன் மட்டும் இன்னும் வந்தபாடில்லை" என்று பத்திரிகை ஒன்றுக்கு கடிதம் எழுதியிருக்கிருர்! கல் கல்கத்தாவில் மட்டுந்தாஞ இந்த நிலைமை?

✣ இந்தக் காலத்துப் பெண்கள் அதிகமாக வெட்கப்படுவது கிடையாது! ஆனல், இவர்களுடைய நடவடிக்கைகளினல் இவர்களது பெற்ருேர்கள்தான் வெட்கப்படும்படியாக இருக்கிறது!

✣ குழந்தைகளுக்குத் தாய்ப் பால் ஊட்டத் தயங்கும் பெண்களுக்கு மார்பகப் புற்று நோய் ஏற்படுகிறது! பிள்ளைகள் சாவின் எண்ணிக்கை அதிகரிப்பதற்கும் தாய்ப்பாலின்மையே காரணம்! பாலூட்டுவது பெண்களின் பிறப்புரிமை, அது குறித்துப் பெண்கள் பெருமிதம் அடையவேண்டும். பெண்களின் உடற்கூறில் ஏற்படும் சில ''சமநிலையின்மை''களைச் சரி செய்யவும் பாலூட்டுவது அவசியம்!

✣ திபேத்தில் 'தலைலாமா'க்களே நாட்டின் தலைவர்களாகவும் இருந்துவந்தனர். ஒரு தலைலாமா இறந்தால் அதே நேரத்தில் திபேத் நாட்டில் பிறந்த குழந்தையை, தலைலாமாவின் மறுபிறவியாகக்கருதி, எடுத்து வளர்த்துத் தலைவனாக்கினர். மிகவும் வறுமைப்பட்ட திபேத் மக்களிடையே தலைலாமாக்கள் சுகபோகத்துடன் வாழ்ந்தனர். தலைலாமா வசிக்கும் கோட்டையின் நீளம் 900 அடி! அந்த கோட்டையிலுள்ள ஒரு கோபுரத்தின் உயரம் 400 அடி! இன்று திபேத் நாடு செஞ்சீனாவின் கையிலிருக்கிறது. தலைலாமா தப்பி ஓடிவந்து இந்தியாவில் அடைக்கலம் புகுந்திருக்கிறார்!




✣ பழைய நடிகர் பாலையா! வில்லன் நடிப்பிலும் ஹாஸ்ய நடிப்பிலும் வல்லவர்! அருமையான குணசித்திர நடிகருங்கூட! தமிழ்த் திரையுலகில் வில்லன் நடிப்புக்கு ஒரு தனி இலக்கணம் வகுத்த இந்த நடிக வில்லனை, சமீபத்தில் சினிமா உலகில் உள்ள சில நிஜ வில்லன்கள் அதிர வைத்திருக்கிறார்கள்! பாலையா இப்போது மனம் நொந்துபோயிருக்கிறார்!

✣ நியுசிலாந்து நாட்டு இரவு விடுதிப் பாடகி ஒருவர் தனது இரட்டைப் பெண் குழந்தைகளுக்கு 'இனிமை' என்றும் 'மென்மை' என்றும் பெயர் சூட்டியிருக்கின்றார்!

'வெள்ளி' அடுத்த இதழ்

# தீபாவளிச் சிறப்பு இதழ்



“நாடக விளம்பரங்களில் எழுத்தாளனுக்குரிய மதிப்புச் சரிவரக் கொடுபடுவதில்லை; இயக்குநர், முக்கிய நடிகர்களைப்போல நாடக எழுத்தாளனும் மதிக்கப்படவேண்டும்” என்று வலியுறுத்தியிருக்கும் ஏ. ரி. பொன்னுத்துரை ஒரு சிறந்த நடிகர், தயாரிப்பாளர், எழுத்தாளர், ரசிகர். சமீபத்தில் யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற நாடகம் பற்றிய கருத்தரங்கில் அவர் சொன்னது: “அமெரிக்க நாடகசாலை நிர்வாகி ஒருவர் தமது மண்டபத்தில் பின்வருமாறு எழுதித் தொங்கவிட்டார்: “Here the author top-dog” (நாடக ஆசிரியனே முக்கியஸ்தன்!)

✣ “அபிநேத்ரி” என்ற இந்தி திரைப்படத்தில் நடிக்கும் ஹேமமாலினி ஒரு நடனக் காட்சிக்காக ஐம்பத்து நான்கு வித உடைகளை மாற்றி மாற்றி உடுத்தி ஆடினார். இதுபற்றிக் குறிப்பிடும்போது “நடனம் ஆடியதைவிட இத்தனை தடவை உடைகளை மாற்றியதில்தான் களைத்துப்போய் விட்டேன்” என்று சொல்லியிருக்கிறார்! இவருடைய நடனத்தைக் காட்டுவதைவிட, இவருடைய அழகையே பல போஸ்களில் காட்டுவதில்தான் தயாரிப்பாளர்களுக்கு அக்கறை!


✣ “சினிமாத் தொழிலில் நடிகனாக ஆரம்பிக்கும் போது புகழும் பணமும் வேண்டும் என்று நினைப்பவன் இரண்டும் கிடைத்த பின்னர் வெளியே தலை காட்டப் பயப்படுகிறான்” என்று சமீபத்தில் சொல்லியிருக்கிறார் எலிஸபெத் டெய்லரின் ஐந்தாவது கணவரும், பிரபல நடிகருமான ரிச்சர்ட் பர்ட்டன்! இவர் சொல்வது தமிழ்ப்பட உலகுக்குப் பொருந்தாது! இங்குள்ள நடிகர்கள் பணமும் புகழும் கிடைத்தவுடன் அரசியல் துறையையல்லவா ஆட்டிப் படைக்கப் புறப்பட்டு விடுகிறார்கள்!

✣ “செல்வம் படைத்தவர்கள் அந்தச் செல்வத்தைஒரு பொதுச் சொத்துபோலக் கருதவேண்டும்; தமது செல்வத்தை அனைவருக்கும் பயன்படுத்தும் தர்மகர்த்தாக்களாகவே தங்களைக் கருதவேண்டும்; அரசினரின் தலையீடு இல்லாமல் பணக்காரர்கள் தாமாகவே பொது நலனை விளைவிக்கவேண்டும்” என்பது காந்தியடிகளின் உபதேசம்! பணக்காரர்களில் எத்தனைபேர் இந்த உபதேசத்தைக் கடைப்பிடிக்கிறார்கள்? பணக்காரர்கள் இதைக் கடைப்பிடிக்கவேண்டுமாயின் அவர்களிடம் மிகுந்த கருணையும், ஒழுக்கமும், எளிமையும் இருக்கவேண்டும்! பணக்காரர்களிடத்தில் இந்தக் குணங்கள் இல்லாதவிடத்து அரசாங்கத்தின் தலையீடு தவிர்க்கமுடியாததாகும்!

✣ விமானப் பயணம் புறப்படுவதற்கு முன்னால் அளவுக்கு மிஞ்சி சாப்பிடுவது; வெறும் வயிற்றோடு போவது — இரண்டுமே நல்லதல்ல!

# பிச்சைக்காரரும் கருணாநிதியும்

✣ கிட்டத்தட்ட இருபது வருடங்களுக்கு முன்னால் ஒரு புரட்சியை ஏற்படுத்தியது 'பராசக்தி' திரைப்படம். இந்தப் படத்தின் மூலம்தான் நடிகர் திலகம் சிவாஜிகணேசனுக்கு பெரும்புகழோடு திரையுலகில் நுழையும் வாய்ப்புக் கிடைத்தது. கலைஞர் கருணாநிதியின் வசனங்களுக்கு ஒரு மவுசை ஏற்படுத்தியதும் இந்தத் திரைப் படம்தான்.



இந்தப் படத்தில் ஒரு காட்சியில் ஞானசேகரனாக நடித்த இலட்சிய நடிகர் எஸ். எஸ். ராஜேந்திரன் ஒரு பிச்சைக்கார மாநாட்டைக் கூட்டுகிறார். அதில் ''பிச்சைக்காரர்கள் நாம் மட்டுமல்ல! இந்த நாடு பூராவுமே பரந்து கிடக்கின்றனர். முதலில் பிச்சைக்காரர்கள் அத்தனை பேரையும் ஒன்று சேர்க்க வேண்டும், நமக்காக அரசாங்கமோ தேசக் கட்சிகளோ பாடுபடுவதாகத் தெரியவில்லை. நம்முடைய கோரிக்கைகளை வீடுவீடாகச் சென்று வெளியிடுவதைவிட, நாடறியப் பரப்புவதே நலம். நம்முடைய குரல் 'அரகரமகாதேவா' என்று கைலாசத்துக்கு எட்டிப் புண்ணியமில்லை. அரசாங்கத்துக்கு எட்டவேண்டும். பிச்சைக்காரர்கள் அத்தனை பேரையும் ஒன்று சேர்த்து, மாநாடு ஒன்று நடத்தவேண்டும். அந்த மாநாட்டுக்கு சென்னை மாகாண பிச்சைக்காரர் மாநாடு என்று பெயரிடவேண்டும். வருங்கால நமது சமுதாயம் வகையோடு வாழ வழி வகுக்க வேண்டும்'' என்று கருணாநிதி எழுதிய வசனங்களை அனல் தெறிக்கப் பேசுகிறார்.

பிச்சைக்காரர்களுக்கு மறுவாழ்வு அளிக்கவேண்டும் என்ற ஆவல் முதலமைச்சர் கருணாநிதிக்கு இன்று நேற்று ஏற்பட்டது அல்ல. ஏறத்தாழ இருபது ஆண்டுகளுக்கு முன்பே, அவர் சாமானியராக இருந்த காலத்திலேயே, இந்தத் திட்டத்தை உருவாக்கிவிட்டார். இதற்கு 'பராசக்தி' திரைப்படமே நல்ல சான்று!



✣ ஏட்டுச் சுவடி வடிவத்தில் கிடந்த பல தமிழ் நூல்களை அச்சுவடிவம் பெறச் செய்வதற்காக அயராது உழைத்தவர் இருவர்! ஒருவர் ஈழத்தைச் சேர்ந்த சி. வை. தாமோதரம்பிள்ளை; மற்றவர் தமிழகத்தைச் சேர்ந்த உ. வே. சாமிநாதையர்! இந்த சாமிநாதையரின் முதல் மாணாக்கர் "கலைமகள்" ஆசிரியரான கி. வா. ஜகந்நாதன்! சாமிநாதையரை 'தமிழ்த் தாத்தா' என்று அழைப்பார்கள்! தமிழ்த்தாத்தா தனது சுயசரிதையை புத்தகமாக எழுதி வெளியிட்டார்! இந்தச் சுயசரிதையின் பிற்பகுதி பூரணத்துவம் பெறாத நிலையில் இருக்கிறது! இதனைப் பூரணப்படுத்தும் முயற்சிகளில் இப்போது ஈடுபட்டு இருக்கிறார் தமிழ்க் கடல் கி. வா. ஜ.!


✣ கிருஷ்ணகிரித் தொகுதியில் நடைபெற்ற, இந்திய லோக சபை உபதேர்தலில், இந்திரா காங்கிரசின் சார்பில், தி.மு.க. வின் ஆதரவுடன் போட்டியிட்ட இந்திய மத்திய அரசாங்க திட்ட மந்திரி சி. சுப்பிரமணியம் அமோகமான வெற்றி பெற்றிருக்கிறார்! கருணாநிதியும், எம். ஜி. ஆரும் கூட இந்தத் தேர்தலில் இவருக்காகப் பிரச்சாரம் செய்து இருக்கிறார்கள்! தி. மு. க, வின் ஆதரவு இல்லாவிட்டால் சுப்பிரமணியத்துக்கு இந்த வெற்றி கிடைத்திருக்காது!

✣ அமெரிக்க ஜனாதிபதி நிக்ஸன் எடுத்த சில பொருளாதார நடவடிக்கைகள் உலக நாடுகள் அனைத்துக்குமே பெரும் பிரச்சினையைக் கொடுத்து இருக்கின்றன. "அமெரிக்கா மிகவும் லேசாக தனது மூக்கைச் சிந்தினால் போதும், மற்றைய நாடுகளுக்குக் கடுமையான குளிர் ஜுரம் வந்துவிடும்" என்று ஆங்கிலத்தில் ஒரு வசனம் உண்டு. இதன் உண்மை இப்போதுதான் தெளிவாகத் தெரிகிறது!



✣ "காந்தி" என்றால் கவர்ச்சி என்று பொருள். "கஸ்தூரி" என்பது நறுமணப் பொருள். காந்தியடிகளும் கஸ்தூரிபாவும் மக்களிடம் கவர்ச்சியும் புகழ் மணமும் கொண்டவர்களாகவே விளங்கினார்கள்.

✣ அமெரிக்காவில் உள்ள நீக்ரோ இனத்தவர்களுக்கு வாழ்க்கையில் முன்னேறுவதற்குக்கிடைக்கக் கூடிய வாய்ப்புக்களும் வசதிகளும் மிகவும் குறைவு, ஆனால், ஒரு நீக்ரோவாக இருந்தபோதிலும் தனது திறமையினால் முன்னுக்கு வந்த



வர் லூயி ஆம்ஸ்ட்ரோங்! "ஜாஸ்" இசைச் சக்கரவர்த்தி இவர்! அண்மையில் இவர் காலமாகிவிட்டார்! கெட்டிக்காரர்கள் வாழ்க்கையில் முன்னேறமுடியும் என்பதற்கு இவருடைய வாழ்க்கை ஒரு சிறந்த உதாரணம்!

✣ பாம்புகளில் சுமார் 3000 இனங்கள் வரை உள்ளன பாம்புகள் இல்லாத நாடே இந்த உலகில் இல்லையென்று சொல்லலாம். நியூசிலாந்திலும், அயர்லாந்திலும் வேறு சில துருவப் பகுதிகளிலும் மட்டுந்தான் பாம்புகள் வசிப்பதில்லை. நமது உஷ்ணவலயப் பிரதேசங்களில் பாம்புகளை நிறையக் காணக் கூடியதாயிருக்கிறது!

✣ ஜோகர் என்பவர் ஹிந்திப் படவுலகில் உள்ள ஒரு நகைச்சுவை நடிகர். பம்பாயிலிருந்து வெளிவரும் "ஃபிலிம் ஃபேர்" பத்திரிகையில் இவர் ரசிகர்களின் கேள்விகளுக்குப் பதிலளிப்பது வழக்கம். தமிழ் சினிமா உலகையும், தமிழ் நடிகர்களையும் எப்பொழுதும் நையாண்டி செய்து பதிலளிப்பது தான் இவரது வழக்கம்; இவர் இந்த மாதிரிச் செய்வதற்குக் காரணம் தமிழர்கள் வளர்ச்சியில் இவருக்குள்ள பொறாமையும் எரிச்சலும்தான்!

✣ சினிமாப் படங்கள் கவர்ச்சியாக இருந்தால்தான் கூட்டம் கூடும் என்று இந்தியப் படத்தயாரிப்பாளர்கள் நினைக்கிறார்கள். ஆனால் மேல் நாடுகளில் கவர்ச்சிப் படங்களுக்கு மவுசு குறைந்து வருகிறது. ஆபாசப் படங்களையும், அடிதடி சண்டைப் படங்களையும் மேல்நாட்டு ரசிகர்கள் இப்போது விரும்புவது இல்லை. இதற்குக் காரணம் கவர்ச்சியைப் பார்த்துப் பார்த்து அவர்கள் சலித்துப் போனது தான். கதை நிறைந்த கருத்துள்ள படங்களையே இப்பொழுது அவர்கள் விரும்புகிறார்கள்!

✣ ஒரு நாய் உங்களைத் தாக்க வந்தால் நீங்கள் என்ன செய்யவேண்டும் தெரியுமா? நிதானமாக, பதட்டமில்லாமல் நீங்கள் அதை நோக்கி நெருங்கவேண்டும். உங்கள் தன்னம்பிக்கை, நாய்க்கு உங்கள் மீது உள்ள அவநம்பிக்கையைப் போக்கிவிடும்.

சுப்பிரமணியம், திருமலை.

★ படிப்பை மறந்து விளையாட்டுக்களை நேசிப்பவர்கள் எப்படிப்பட்டவர்கள்?

'நேசிப்பதை' விளையாட்டாகக் கொண்டவர்களைக் காட்டிலும் மேலானவர்கள்.

கா. சிவகுருநாதன், மல்லாகம்.

★ வாழ்வுக்குப் பயன்படும் விஷயங்கள் எத்தனையோ இருக்க, நடிகைகளைப் பற்றிய விஷயங்களைப் பிரசுரிப்பது ஏன்?

நடிப்புத் துறையில் உள்ளவர்களை கூத்தாடிகள் என்று பரிகசித்த காலம்போய், அவர்களைக் கலைஞர்கள் என்று பாராட்டுகின்ற காலம் இது என்பது உமக்குத் தெரியாதா? துறை எதுவாக இருந்தாலும் சரிதான், தங்களது உழைப்பு, திறமை, தன்னம்பிக்கை என்பவற்றால் முன்னுக்கு வந்தவர்கள் பாராட்டுக்கு உரியவர்கள்!

அ. ச. லிங்கம், கிளிநொச்சி

★ மொழிப் பிரச்சனையை எப்படித் தீர்க்கலாம் என்பதைப் பற்றி தீர்க்கமாகச் சிந்தித்து திறமையான முடிவுகளை எடுத்திருக்கும் அரசியல்வாதிகள் யாரையாவது உங்களுக்குத் தெரியுமா?

பிரச்சனைக்குரிய மொழிகளை எப்படித் தீர்த்துக்கட்டலாம் என்பதைப்பற்றி தீர்க்கமான முடிவுகள் கொண்டுள்ள அரசியல்வாதிகளைத்தான் எனக்குத் தெரியும்!

எம். செங்கதிர்ச்செல்வன்,
உடப்புசல்லாவ

★ சந்திரமண்டலப் பிரயாணம் வேறோர் புதிய வாழ்விற்கு வழிவகுக்குமா?

நிச்சயமாக! மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்டபோது அதைப்பற்றிய ஆராய்ச்சிகளை மேற்கொண்ட விஞ்ஞானி ஃபாரடேயைப் பார்த்து "இதனால் என்ன பயன் ஏற்படப் போகிறது" என்று கேட்ட அரசியல்வாதிகளும், சமயப் பிரமுகர்களும் இருக்கத்தான் செய்தார்கள்! ஆனால், மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்டதன் காரணமாக இந்த உலகம் எவ்வளவு சுருங்கிவிட்டது என்பதையும், இந்த உலகத்தில் எவ்வளவு முன்னேற்றங்கள் ஏற்பட்டுவிட்டன என்பதையும் இப்போது நாம் நேரடியாகவே காணக்கூடியதாக இருக்கிறது! உலகத்தில் மின்சாரம் கண்டுபிடிக்கப்பட்டதனால் உண்டான மாற்றங்களைக் காட்டிலும் அதிக மாற்றங்களை ஏற்படுத்தப்போகிறது, விண்வெளிப் பயணத்தில் கிடைத்துள்ள வெற்றிகள்!

ந. கண்மணி, கோப்பாய்.

★ பெண்களைக் கிண்டல் செய்து, 'சுதந்திரன்' பத்திரிகையில் 'அத்தான்' என்ற புனைபெயரில் எழுதிவரும் கவிஞர் யார்?

# கேள்வி-பதில்

சாமிஜி

கவிஞர். காசி ஆனந்தன்! நன்ருக எழுதுகிருரே! அவருடைய கவிதைகளில் சூடும் இருக்கிறது; சுவையும் இருக்கிறது.

க. இராமையா, குருநாகல்:

✶ காமராசர் இப்போது எப்படி இருக்கிருர்?

சட்டைப் பையில் கனமில்லாதவர் காமராசர்! எனவே, அவருக்கு வாழ்க்கையில் கவலைகள் கிடையாது! அவருடைய கட்சி தோற்றுவிட்டபோதிலும் பெரும்பாலான மக்களிடத்தில் அவருக்குச் செல்வாக்கு இருக்கவே செய்கிறது! இதன் காரணமாகத்தான் அவரை இந்திரா காங்கிரசில் சேர்ப்பதன் மூலம் தமிழ்நாட்டில் தி. மு. க. வின் பலத்தை முறித்துவிடலாம் என்று கனவு காண்கிருர்கள் சிலர்! ஆனுல் இந்திராவும் காமராசரும் சேருவது என்பது இனி நடவாத காரியம்!


சொல்லின் செல்வன்,
கொட்டடி.

✶ மனித வாழ்வில் ஏற்படும் நிகழ்ச்சிகளில் மறக்க முடியாதது எது?

யாழ்ப்பாணத்து வாலிபனைப் பொறுத்த மட்டில் அரசாங்கத்தில் உத்தியோகம் கிடைக்கின்ற நிகழ்ச்சி! ஏனெனில், அதற்கு முன்னர் அவனைத் திரும்பிப் பார்க்கவும் மறுத்த யாழ்ப்பாணத்து இளம் பெண்கள் அதற்குப் பின்னர் அவனை விரும்பிக் காதலிக்கவும் முன் வருகிருர்கள்!

செ. கந்தசாமி, யாழ்ப்பாணம்.

✶ ஐ. நா. வின் பொதுக்காரியதரிசியாக நமது நாட்டு ஷெர்லி அமரசிங்கா தெரிவு செய்யப்படுவாரா?




மாட்டார்! இஸ்ரேல் நாட்டவர்களுக்கு இவரைப் பிடிக்கவில்லை. அவர்கள் இவருக்கு எதிராக படுமூச்சாக வேலை செய்து வருகிருர்கள். இஸ்ரேல் நாட்டவர்கள் சாதாரணமானவர்கள் அல்ல! நினைத்ததைச் சாதிக்கக் கூடியவர்கள்!

அ. செல்வரத்தினம், கோட்டமுனை.

✶ பாதரசம் என்பது யாது?

பஸ்ஸிலோ அல்லது ரயிலிலோ பிரயாணம் செய்யும் போது இளம் பெண்களின் பாதங்களை உரசுவதினுல் கிடைக்கும் ரசனைக்குத்தான் 'பாதரசம்' என்று பெயர் வைத்தி

ருக்கிறார்கள் விஷயம் தெரிந்த மாணவர்கள்! ஆனால் ரசாயன ஆசிரியர்களோ அது ஒரு மூலகம் என்கிறார்கள்!

சி. சி. மகேந்திரன், அல்வாய் தெற்கு:

✶ வீரம் எங்கே இருக்கிறது?

'மார்க்கெட்'டில் வியாபாரம் செய்யும் பெண்களிடத்தில் தான் இப்போது வீரத்தைக் காணக்கூடியதாக இருக்கிறது. இவர்கள்தான் எதற்கும் அஞ்சாதவர்களாக இருக்கிறார்கள். இவர்கள் வசனம் பேசத் தொடங்கினால் 'கண்ணகி' கண்ணும்பா கூட இவர்களிடம் பிச்சை வாங்கவேண்டும்!

கா. யோகேஸ்வரி, கொழும்பு-13

✶ 'வெள்ளி'யின் அரசியற் கொள்கை என்ன?

எந்த ஒரு அரசியல் கட்சியையும் சார்ந்து நிற்காது, நாட்டுக்கு நன்மைதரும் விஷயங்களை ஆதரிப்பதும், 'தனி மனித சுதந்திரத்தை போற்ற வேண்டும்' என்ற தத்துவத்தைப் பரப்புவதுமே வெள்ளியின் அரசியல் கொள்கைகளாகும்.

சித்தி ஜெஸீமா, காத்தான்குடி-4

✶ அமெரிக்கரும், ரஷ்யரும் வானவெளியை ஆராய்ந்து சாதனை புரிகின்றனர். எமது நாட்டவர் எதை ஆராய்ந்து சாதனை புரிகின்றனர்?

எமதுநாட்டவரின் ஆராய்ச்சிகள் சாதனையாக ஒன்றும் இல்லாவிட்டால் பரவாயில்லை; மற்றவர்களுக்கு வேதனையாக அல்லவா இருந்து தொலைக்கின்றன!

* பொ. கிருபானந்தன்,
வல்வெட்டித்துறை:

(பரிசுக்குரிய கேள்வி)

✶ ஈழத்தின் இலக்கிய முன்னேற்றத்திற்கு நீங்கள் கூறும் ஆலோசனை என்ன?

இலங்கையில் தமிழ்மொழியைப் பேணவேண்டும் என்பதற்காக உழைப்பதாகக் கூறும் தமிழரசுக் கட்சியைச் சார்ந்தவர்களிலேயே பலர் ஈழத்து தமிழ் இலக்கிய முயற்சிகளுக்கு ஆதரவளிக்காது ஒதுக்குவதை நான் அறிவேன்! இவர்களுள் எம். பிக்களும் சிலர் இருக்கிறார்கள்! இதே போலவே இந்தியசஞ்சிகைகளைத் தடைசெய்யவேண்டும் என்று கூறும் கம்யூனிஸ்ட் கட்சியைச் சேர்ந்த சிலரும் ஈழத்துச் சஞ்சிகைகளையும் புத்தகங்களையும் பணம்கொடுத்து வாங்காது ஒதுக்கிவிட்டுஇந்தியவெளியீடுகளை மட்டுமே பணம் கொடுத்து வாங்கிப் படிப்பதையும் நான் அறிவேன்! அரசியல் வாதிகளை நம்பினால் ஈழத்து இலக்கியம் முன்னேறாது! ஈழத்து இலக்கிய முன்னேற்றம் இளைஞர்களின் கையில்தான் இருக்கிறது! ஒவ்வொரு இளைஞனும் பத்திரிகைகள் புத்தகங்கள் வாங்குவதற்காக செலவுசெய்யும் தொகையில் சரி அரைவாசியையாவது ஈழத்து வெளியீடுகளை வாங்குவதற்கென ஒதுக்கிவைக்கவேண்டும்! இப்படிச் செய்கின்ற சில இளைஞர்கள் இருக்கிறார்கள். இவர்களின் தொகை பெருகவேண்டும்!

க. செ. ராணி, யாழ்நகர்:

★ நமது தமிழ்ப் பெண்களிடம், எந்த இனப் பெண்களிடமும் இல்லாத சிறப்பு என்று எதைக் குறிப்பிடலாம்?

மற்றைய இனப் பெண்கள் காட்டுக்குச் சென்று வேட்டையாடுவதற்கு ஒப்பான செயலாக திருமணத்தை நினைக்கிறார்கள். சிங்கத்திற்கு குறிவைக்கும் போது சிறுநரி கிடைத்தாலும் கிடைக்கலாம், முயல் கிடைத்தாலும் கிடைக்கலாம். அல்லது ஒன்றுமே கிடைக்காமற் போனாலும் போகலாம்! சில சமயங்களில் வேட்டைக்குச் சென்றவரையே வெறிகொண்ட மிருகங்கள் வீழ்த்தி விடுவதும் உண்டு! ஆனால் நமது தமிழ்ப் பெண்கள் பாலத்தில் நின்று தூண்டில் போடுவதற்கு ஒப்பான செயலாக திருமணத்தை நினைக்கிறார்கள்! தூண்டில் போடும் போது பெரிய மீன் கிடைத்தாலும் கிடைக்கலாம்; பேத்தை மீன் கிடைத்தாலும் கிடைக்கலாம்! காட்டில் வேட்டையாடுவதைக் காட்டிலும் பாலத்தில் நின்று தூண்டில் போடுவது ஆபத்துக் குறைவான செயல்!

பி. மாணிக்கம், குருதெனிய

★ ஒருமனிதன் இறக்கும் போது திருவாசகத்தை படிக்கின்றார்கள் இந்துக்கள், ஏன்?

மனத்தை அமைதிப்படுத்தி ஒருமனப்படுத்துவதற்கு திருவாசகத்தை விட்டால் வேறு என்ன இருக்கிறது! இறக்கும் நிலையில் உள்ள மனிதனுக்கு மன அமைதியைத் தவிர வேறு ஒன்றும் முக்கியம் இல்லையல்லவா?


சொ. தவராசா, பருத்தித்துறை

★ இளம் சந்ததியினர் மேல்நாட்டு நாகரிகத்தைப் பின்பற்றுவதால் ஏற்படும் விளைவுகள் யாது?

துணிப் பிரச்சினை தீருகிறது; சீதனப் பிரச்சினை ஒழிகிறது; குடும்பம் கட்டுப்படுத்தப்படுகிறது! சில சமயங்களில் திருமணமும் நடக்கிறது!

க. நரேந்திரன், கொக்குவில்.

★ சிவாஜியைத் தாக்கி எம். ஜி. ஆரைப் புகழ்ந்து எழுதுவதனால் பத்திரிகைக்கு வெள்ளித் திசை அடிக்கும் என எண்ணுகிறீரா?




தனிப்பட்ட ஒரு சிலரை தாக்குவதினாலோ அல்லது தூக்குவதினாலோ பத்திரிகை வளர்ச்சியடையும் என்று நினைப்பது தவறாகும். ஆனால் ஒருவர் எவ்வளவு பெரிய கொம்பனாக இருந்தாலும் சரிதான், அவரைத் தாக்கவேண்டிய இடத்தில் தாக்கவேண்டியதும், தூக்கவேண்டிய இடத்தில் தூக்கவேண்டியதும் ஒரு பத்திரிகையின் கடமையாகும்!

காரை: திலகர், கொழும்பு 12.

✶ கலைஞர் கருணாநிதி பற்றி உங்கள் கருத்து என்ன?

சுறுசுறுப்பு மிகுந்தவர்; அபாரமான துணிச்சல்காரர்! ஆழ்ந்து சிந்திப்பவர்; அரசியல் சாணக்கியத்தில் ஆனைப்பட்ட ராஜாஜியையே வெல்லக்கூடியவர்;



அழகாகப் பேசக்கூடியவர்; எந்தெந்த நாடுகளிலோ வெல்லாம் வசிக்கும் தமிழர்களின் நம்பிக்கை நட்சத்திரமாக இருப்பவர்! காலம் கடந்த இப்போது இவருக்கு அண்ணாமலைப் பல்கலைக் கழகம் 'டாக்டர்' பட்டம் வழங்கி இருக்கிறது! இந்த டாக்டர் பட்டத்தை இவர் எதிர்க்கட்சியில் இருந்த காலத்திலேயே அண்ணாமலைப் பல்கலைக் கழகம் வழங்கியிருந்தால், அந்தப் பல்கலைக் கழகத்தின் பெருமை எவ்வளவோ உயர்ந்திருக்கும்!

க. சந்திரமனோகரன், பரந்தன்

✶ கேள்விக்குப் பதில் அளிக்கும் நீர் யார்?

உம்மைப்போல் நானும்
உள்ளிக்கும் உப்புக்கும்
ஒருவேளை வெற்றிலைக்கும்
அள்ளிப் பருகியுண
அரைவயிற்றுக் கஞ்சிக்கும்
நித்தம் உழைத்தலுத்தும்
நெஞ்சம் அலுக்காத
மானிடன் தான்!

பீ. ஆர். ஐ., சற்கோட்டை

✶ தமிழகத்துப் பத்திரிகைகளைத் தடைசெய்யாமல் ஈழத்துப்பத்திரிகைகளை முன்னுக்குக் கொண்டுவர முடியாதா?

முடியும்! பண பலமும் ஆள்பலமும் கொண்டுள்ள தமிழகத்துப் பத்திரிகைகளுடன் போட்டியிட்டு முன்னேறுவது என்பது லேசான காரியமல்ல! உழைப்பும் தன்னம்பிக்கையும் இருந்தால் தமிழகத்துப் பத்திரிகைகளைத் தோற்று ஓடச்செய்ய முடியுமென்று 'வெள்ளி' நம்புகிறது! அரசாங்கம் இந்தியப் பத்திரிகைகளை தடை செய்யத் தேவையில்லை! இங்கிருந்து தரமும் கவர்ச்சியும் நிறைந்த பத்திரிகைகள் வெளிவந்தால் இந்தியப் பத்திரிகைகள் தாமாகவே செல்லாக் காசாகி விடுவது நிச்சயம்! இந்த வழியைத்தான் 'வெள்ளி' கடைப்பிடிக்கிறது!

இ. பாக்கியநாதன், அல்வாய்

✶ நமக்கு 'வெள்ளி' கூறும் தத்துவம் என்ன?

உழைப்பும், தன்னம்பிக்கையுமே உயர்வுக்கு அடிப்படை!

சா. பாலச்சந்திரன், நீர்வேலி

★ இப்பொழுதுள்ள சினிமாப் பாடல்களுக்கும், முற்காலத்தில் வாழ்ந்த நாயன்மார்கள் பாடிய தேவாரங்களுக்கும் உள்ள வித்தியாசம் என்ன?

மினிஸ்கர்ட் அணிந்து 'ஷோ'வுக்காக துணிக்கடை வாசல்களில் வைக்கப்பட்டிருக்கும் பெண் பொம்மைக்கும் அழகாகச் சேலை அணிந்து வெளியே கிளம்பும் உயிருள்ள பெண்ணுக்கும் உள்ள வித்தியாசம்தான்!

வவுனதீவு, இரத்தினசிங்கம்

★ தமிழினத்தின் எதிர்காலம் எப்படி இருக்கும்?

தங்களுக்கெனத் தனிநாடு இல்லாத காரணத்தினால், நீண்ட காலமாக பலவித இன்னல்களையும் துன்பங்களையும் அனுபவித்தவர்கள் யூத இனத்தினர்! இன்று கொடிகட்டிப் பறக்கிறார்கள்! தளராத உழைப்பும் தன்னம்பிக்கையும் தான் அவர்களது முன்னேற்றத்திற்குக் காரணம்! அத்தகைய உழைப்பும் தன்னம்பிக்கையும் தமிழர்களிடமும் உண்டு என்று திடமாக நம்புபவன் நான்!

நெல்லை ஐ. நடேஸ்.

★ சினிமா சமுதாயத்தைப் பாழடிக்கிறது என்கிறார்களே இதுபற்றித் தங்கள் கருத்து என்ன?

சினிமா ஒரு அற்புதமான விஞ்ஞான சாதனை! இந்தக் கெட்டுப்போன சமுதாயம் தான் அந்த அற்புதமான விஞ்ஞான சாதனையையும் சில சமயங்களில் தவறான முறையில் பயன்படுத்த முனைகிறது!

எஸ். நமசிவாயம், உடபுசல்லாவ

★ இலங்கையின் தனித்துவத்தை எடுத்துக்காட்டும் வகையில் தற்போது ஈழத்திலிருந்து பல சஞ்சிகைகள் வெளிவந்து கொண்டிருக்கும் போது, இந்தியப் பத்திரிகையான கல்கண்டின் சாயலில் ஏன் ஒரு சஞ்சிகையை வெளியிடத் துணிந்தீர்கள்?

'சாயல்' அதுமாதிரி இருந்தபோதிலும் 'சாரம்' அதை விட நன்றாக இருப்பதாகவும், இதனுடைய 'சாரம்' ஈழத்தவர்களுக்கு பயன்படக் கூடியதாக இருப்பதாகவும் பல நண்பர்கள் அபிப்பிராயப்படுகிறார்களே!

ஆரென்னெல் லிங்கம், திருநெல்வேலி, மேற்கு.

★ சிவாஜிகணேசனைப் பற்றி இரு வார்த்தைகள்!



காங்கிரஸாரின் எம். ஜி. ஆர்!

✣ 'அப்பலோ-15' விண்வெளி வீரர்கள் தமது சந்திரப் பயணத்தை வெற்றிகரமாக முடித்துக்கொண்டு திரும்பியிருக்கிறார்கள். டேவிட் ஸ்கொட், ஜேம்ஸ் இர்வின் ஆகிய இரு வீரர்களும் சந்திரத் தரையில் இறங்கி ஆராய்ச்சி நடத்தியபோது சந்திரனைச் சுற்றி வலம் வந்துகொண்டிருந்தவரான மேஜர் வோர்டன் விண்வெளிக்கப்பல் பூமிக்குத் திரும்பும் வழியில், விண்வெளிக் கப்பலை விட்டு வெளியே வந்து விண்வெளியில் மிதந்து கொண்டே சில நிமிட நேரங்கள் நீந்தியிருக்கிறார். விண்வெளியில் இது ஒரு புதிய சாதனையாகும்.

✣ சோவியத் ரஷ்யாவின் தலைநகரான மாஸ்கோவில் சிறுவர்கள் இரவு ஒன்பது மணிக்கு மேல் தெருவில் சுற்றிக்கொண்டு இருக்கக்கூடாது, பதினான்கு வயதுக்கு உட்பட்ட சிறுவர்கள் சாலைகளில் சைக்கிள் ஓட்டக்கூடாது. சிறுவர்களால் சில தொல்லைகள் ஏற்படுகின்றன என்று கருதி மாஸ்கோ நகரசபை இந்தத் தடைகளை விதித்து இருக்கிறது.

✣ உங்கள் வீட்டிலுள்ள ரோஜாச் செடிகளை பூச்சிகள் அரித்து நாசமாக்குகின்றனவா? கவலைப்படாதீர்கள்! ரோஜாச் செடிகளுக்குப் பக்கத்தில் வெங்காயத்தை நட்டு வைத்தீர்களானால் இந்தப் பூச்சிகள் எல்லாம் ஒழிந்து விடும். வெங்காய வாசனை இந்தப் பூச்சிகளுக்குப் பிடிப்பதில்லை!


✣ பிரபல தத்துவ ஞானியும், கணித மேதையுமான பெர்ட்ரண்ட் ரஸ்ஸல் நகைச்சுவையாகப் பேசுவதிலும் வல்லவர். ''என்னுடைய 77வது வயதில் ஒரு விமான விபத்தில் மாட்டிக்கொண்டு உயிர் பிழைத்தேன். 79 வது வயதில் நான் காவது முறையாகத் திருமணம் செய்து கொண்டேன். வயதான காலத்தில் எனக்கு விபத்துக்கள் இப்படி அடிக்கடி ஏற்பட்டன'' என்று இவர் ஒரு இடத்தில் எழுதியிருக்கிறார்.

✣ ஒரு மனிதன் மிக மிக வேகமாகச் செய்யக்கூடிய காரியம் கண் இமைப்பதுதான். ஒரு செக்கண்டில் பத்தில் ஒரு பாகம் தான் கண் இமைக்கத் தேவைப்படும் நேரம். மனித உடலில் வேறு எந்தத்தசையும் இவ்வளவு வேகமாக இயங்குவதில்லை.

✣ பிரான்சு நாட்டில் அரசாங்கமே வட்டிக்கடை நடத்துகிறது. நகரசபைகளின் பொறுப்பில் இந்த வட்டிக்கடைகள் விடப்பட்டுள்ளன. இலங்கை அரசாங்கமும் இந்த யோசனையைப் பின்பற்றலாம். நகரசபைகள், கிராமசபைகள் என்பனவற்றின் ஆதரவில் வட்டிக்கடைகள் நடத்தப்பட்டால் எத்தனையோ ஏழைகளுக்கு உதவியாக இருக்கும்.

✣ ஓர் அவுன்சு தங்கக் கட்டியை எடுத்து உருக்கி கம்பியாக நீட்டினால், முப்பத்தி ஐந்து மைல் தூரம் வரை அறுந்து போகாமல் நீட்ட முடியும்.

✣ "வீரகேசரி" பத்திரிகையில் திமிலை மகாலிங்கம் என்ற எழுத்தாளர் "நிலவுக்கும் ஒரு நாள் ஓய்வுண்டு" என்ற தொடர்கதையை எழுதி வருகிறார். மிகவும் இயல்பான முறையில், ஆற்றெழுக்குப் போன்ற நடையில், சுவாரஸ்யமான சம்பவங்களைக் கொண்டதாக, வாசகர்களுக்குச் சிக்கல் தராத விதத்தில் கவர்ச்சியும் சுவையும் மிகுந்ததாக இந்தத் தொடர் கதையை எழுதிவருகிறார். பத்திரிகைகளில் தொடர்கதை எழுதுவது ஒரு தனிக்கலை! அந்தக் கலை நன்கு கைவரப்பெற்றவராக இருக்கிறார் திமிலை மகாலிங்கம்!



✣ எதிர்காலத்தில் உங்கள் கண்கள் பாதிக்கப்படுமா என்பதை முன்கூட்டியே அறிந்து கொள்ள ஒரு கருவி கண்டுபிடிக்கப்பட்டு இருக்கிறது. 45 வயதுக்குப் பின்னர், பலருக்கு கண் பார்வை சரியில்லாமல்போய், நாளடைவில் பார்வை கெட்டு விடுகிறது. இப்படிப் பார்வையை இழக்க, கண்ணில் ஏற்படும் "கிளாகோமா" என்ற நோய் முக்கிய காரணம் ஆகும். இந்நோய் வந்த பின்பு சிகிச்சை அளித்தால் பலருக்கு பலன் அளிப்பதில்லை. முன்கூட்டியே அறிந்து கொண்டால் இந்நோயைத் தடுக்க முடியும். இவ்வாறு அறிவதற்கான கருவிதான் இது. இதன் பெயர் "டோனு மீட்டர்" என்பது. இங்கிலாந்து நாட்டு நிபுணர்கள் இதைக் கண்டுபிடித்து இருக்கிறார்கள்.

✣ சமீபகாலமாக தமிழ் அரசியல் உலகில் தாழ்வு மனப்பான்மையையும், விரக்தியையும் வளர்க்கும் பேச்சுக்களே அதிகம் நிறைந்து வந்திருக்கின்றன. தன்னம்பிக்கை நிறைந்த முறையில் பேசுபவர்களும், செயல் புரிபவர்களும்தான் ஒரு சமூகத்தின் உயர்ச்சிக்கு உண்மையில் சிறந்த தொண்டு ஆற்றுகிறார்கள். தன்னம்பிக்கை நிறைந்த மனிதர்களைத்தான் மற்றவர்கள் மதிக்கின்றார்கள். சமீபத்தில் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் பேசும்போது அமைச்சர் குமாரசூரியர் "இலங்கை எங்களுடைய நாடு. இங்கு வாழும் அத்தனை பேருக்கும் சொந்தமான நாடு எனவே, யாரிடம் யார் உரிமை கேட்பது? எங்கள் உரிமை எங்களிடமே உண்டு" என்று மிகவும் தன்னம்பிக்கை தரும் தொனியில் பேசி இருக்கிறார். தன்னம்பிக்கை நிறைந்த பேச்சுக்களை வரவேற்க வேண்டியது நமது கடமை!

சுகுமாரன் ......கதை

# அதிர்ஷ்டம்

நான் அந்த அறைக்குள் நுழைந்ததும் திடீரென விளக்குகள் பளிச்சிட்டன.

யாரோ எனது வலது கையை வளைத்து முதுகுப் புறமாகக் கொண்டு சென்று எனது விலாவில் முழங்காலினால் உதைத்தார்கள்.

எனக்கு வலித்தது.

உயிர் போவது போன்ற வலி. நான் சுழன்று திரும்பி எனது இடது கையினால் என்னைப் பிடித்தவனின் மூஞ்சியைப் பதம் பார்க்கப் பாய்ந்தபோது, இன்னொருவன் எனது இடது கையைப் பிடித்ததோடு, எனது பிடரியிலும் ஒன்று போட்டான்.

தலையைச் சுற்றிக்கொண்டு வந்தது.

'தப்பிக்க முயல்வது முட்டாள்தனம்' என்பதை உணர்ந்தேன். என்னைப் பிடித்துக்கொண்டவர்கள் இருவரும் தங்களது கைவரிசையைக் காட்டினார்கள்.

எனது பலம் எனக்குத் தெரியும்.

வாங்கவேண்டிய இடத்தில் வாய் பேசாது வாங்கிக்கொள்வதுதான் புத்திசாலித்தனமான காரியம் என்பதை அனுபவத்தினால் உணர்ந்தவன் நான்.

சுண்டுவிரலைக்கூட அசைக்காது வாங்கிக்கொண்டேன்.

"போதும்; நிறுத்துங்கள்!" என்ற குரல் கணீரென்று ஒலித்தது.

அதிகாரமான குரல்.

நான் நிமிர்ந்து பார்த்தேன்.

எதிரே நின்றது ஒரு பெண்!

கண்கள் சிவந்து இருந்தன.

அந்தப் பெண்ணை வர்ணிக்க வேண்டிய அவசியம் இங்கு இல்லை.

வர்ணனைக்குரிய வயதைக் கடந்தவள் அவள்!

"இந்த மிஸிஸ் நாதனை நீ குறைவாக மதிப்பிட்டு விட்டாய்" என்றாள்.

எனக்கு விளங்கவில்லை.

அவள் மிஸிஸ் நாதன் என்பது மட்டும்தான் விளங்கியது.

அவளைப் பார்த்தேன்.

பார்வையைத் திருப்பி,

எனக்கு 'மரியாதை' தந்து வரவேற்ற அந்த இருவரையும் பார்த்தேன்.

சினிமாவில் வருகிற வில்லன்கள் மாதிரி இருந்தார்கள். ஒருவனுக்கு மீசை இருந்தது. மீசை 'புருபுரு' வென்று 'பிரஷ்' மாதிரி இருந்தது. எனக்கும் மீசை இருக்கிறது. அவனுடையதுமாதிரி அல்ல. அதைவிடச் சிறியது. மற்றவனுக்கு மீசை இல்லை. மீசை இருக்கவேண்டிய இடத்தில் வியர்த்துக்கொண்டிருந்தது.

மறுபடியும் அவளைப் பார்த்தேன்.

பணம் மட்டும் தரக்கூடிய ஒரு சொகுசு அவள் உடல் முழுவதும் துள்ளிக்கொண்டு இருந்

தது. பணத்தினுல் மட்டுமே வரக்கூடிய இளமை அவளது உண்மையான வயதை மறைத்துக் கொண்டிருந்தது.

"ஏதாவது செய்து தப்பித்து விடலாம் என்று நினைக்காதே' ஆட்களைப் பார்த்தாயா......உன்னைச் சட்ணிபண்ணி விடுவார்கள்" என்ருள்.

எனக்குக் கொஞ்சம் நிதானம் வரத் தொடங்கியிருந்தது.

"நீங்கள் 'தினமணி கதிர்' படிப்பதுண்டா?" என்றேன் நான்.

'ஏன்?' என்பதுபோல அவள் என்னைப் பார்த்தாள்.

"அந்தப் பத்திரிகையில்வருகிற கதைகளில் உள்ளது மாதிரி இருக்கிறது உங்கள் செயலும் பேச்சும்!"

"தமாஷாகப் பேசுகிருய்" என்ருள்.

"தாங்யூ" என்றேன்.

"மிஸ்டர் ஜகதீசன்! நான் உன்னுடன் நிறையப் பேசவேண்டும். இப்படி இந்த நாற்காலியில் உட்கார்!" என்ருள்.

நான் திரும்பிப் பார்த்தேன்.

"சும்மா நடிக்காதே! உன்னுடைய பெயர் எப்படித் தெரிந்தது என்று யோசிக்கிருய், உன்னுடைய இனிஜியல்கூடத் தெரியும். யூ ஆர் சி. ஜகதீசன்!"

நான் நாற்காலியில் உட்கார்ந்தேன்.

அவர்களது உதையினுல் வலித்த இடங்களைத் தடவி விட்டுக்கொண்டேன்.

எனது மூளை வேலைசெய்தது.

"பேசுவதற்கு முன்னுல் ஒரு சிகரெட் பிடித்தால்தான் எனக்கு உயிர் வரும். உங்களுடைய அடியாட்களின் உதை லேசானதல்ல. வாங்கின கூலிக்கு வஞ்சகமில்லாமல் வேலைசெய்து விட்டார்கள்" என்றேன்.

நான் பேசியபோது அவளுடைய கண்கள் சுருங்கின. அப்படிக் கண்கள் சுருங்குவது ஆபத்தானது என்பது எனக்குத்



தெரியும்? என்னுடைய பேச்சை அளவோடு நிறுத்திக்கொண்டேன்.

மேசைக்கு மேலிருந்த ஒரு சிகரெட் "பக்கெட்'டை தூக்கி அவள் என் பக்கமாக எறிந்தாள். 'பிளாக் மார்க்கெட்'டில் மட்டுமே கிடைக்கக்கூடிய வெளிநாட்டு சிகரெட்! ஒன்றை



✣ சோவியத் அரசாங்கத்தின் அழைப்பின்பேரில், அந்த நாட்டில் சுற்றுப் பயணம் செய்வதற்காகச் சென்று இருக்கிறார் குன்றக்குடி அடிகளார்! சோவியத் ரஷ்யாவில் மட்டுமன்றி, வேறு பல நாடுகளிலும் இவர் சுற்றுப் பயணம் செய்து வருவார்! தமிழ்நாட்டைச் சேர்ந்த மடாதிபதி ஒருவர் ரஜ்யாவுக்குச் செல்வது இதுவே முதல்தடவையாகும்! மடாதிபதிகள் மக்களிடமிருந்து விலகி இருக்காமல், மக்களாக வாழ்ந்து, மக்களது அத்தனை பிரச்சினைகளிலும் பங்குபற்றுவதன் மூலம்தான் மக்களின் மத உணர்ச்சிக்கு மறுமலர்ச்சி ஊட்ட முடியும் என்ற தெளிவான கருத்தை, தனது வாழ்க்கையில் முழுமையாகக் கடைப்பிடித்து வருபவர் குன்றக்குடி அடிகளார்!

உருவி பற்றவைத்துக் கொண்டேன். புகை இதமாக இருந்தது.

"அவர் இன்று ஊரில் இல்லாதது உன்னுடைய அதிர்ஷ்டம்! அவர் இருந்தால் உன்னைக் கொலை கூடச் செய்திருப்பார்" என்றாள் அவள்.

"அவர் அவ்வளவு ஆபத்தானவரா?" என்றேன் நான்.

ஏதாவது பேசவேண்டுமே என்பதற்காகத்தான் இந்தப் பேச்சு.

"நீ செய்த வேலைக்கு அவர் மட்டுமா, யாராக இருந்தாலும் அப்படித்தான் செய்வார்கள்! எவ்வளவு துணிச்சல் இருந்தால் நீ இப்படியானதொரு காரியத்தைச் செய்திருப்பாய்!"

நான் அவளை நிமிர்ந்து பார்த்தேன். ஆனால் ஒன்றும் பேசவில்லை.

"எங்களைப் பற்றி உனக்கு நன்றாகத் தெரியும், சமூகத்தில் எங்களுக்கு உள்ள அந்தஸ்தும் உனக்குத் தெரியும். நீயோ நிரந்தரமான உத்தியோகம் கூட இல்லாத ஒரு முட்டாள்! நீ எதற்காக எங்கள் கமலாவின் மீது ஆசைப்பட வேண்டும்? உன்னுடைய உயிரில் உனக்கு ஆசை கிடையாதா?" என்றாள் அவள்.

"நீங்கள் சொல்வது ஒன்றுமே எனக்கு விளங்கவில்லை" என்றேன் நான்.

"ஏதாவது சொல்லி என்னை ஏமாற்றி விடலாம் என்று நினைக்காதே! கடந்த ஒரு வார

காலமாக நீ கமலாவுக்கு எழுதிய கடிதங்களில் ஒன்றுகூட அவளது கையில் கிடைக்கவில்லை! எல்லாம் என்னிடம் தான் இருக்கின்றன! அந்தக் கடிதங்களில் இருந்துதான் நீ இன்று இங்கு வருவாய் என்பதை அறிந்து காத்திருந்தோம் உன்னைச் செம்மையாக உதைப்பதற்காக!...... ராஸ்கல் .. கமலாவோடு கொஞ்சுவதற்கு கடைசியில் அவளுடைய 'பெட்ரூ'மிற்கே வரத்துணிந்து விட்டாயா? ..... உனக்கு எவ்வளவு உதை தந்தாலும் தகும்... .. உன்னை வெட்டிப்போட்டாலும் தகும்......''—அவள் பேசப்பேச அவளுக்கு மூச்சு வாங்கியது.

''வெட்டிப்போடலாதான்! ஆனால் இந்த நாட்டில் பொலீஸ் கோர்ட் என்று சில விவகாரங்கள் இருப்பதை மறந்து விட்டீர்களே. மேடம்!'' என்றேன் நான்.

நான் பேசி முடிப்பதற்குள் அவள் விரைந்து எனது கன்னத்தில் பளீரென்று அறைந்தாள்.

எனது சுண்டுவிரலுக்குக் கூட அவள் போதாது. ஆனால் பக்கத்தில் நின்ற இருவரையும் உத்தேசித்து நான் எனக்கு வந்த கோபத்தை அடக்கிக் கொண்டேன்.

அவள் என்னைப் பார்த்தாள்.

''எனக்கும் சில விவகாரங்கள் தெரியும்! ஸ்கான்டல் எங்களுக்கும் விருப்பமில்லைத்தான்! உன்னை மாதிரியானவர்கள் எப்படிப்பட்டவர்கள் என்பது தெரியும். உன்னை மாதிரியானவர்களை எப்படிச் சமாளிப்பது என்பதும் எனக்குத் தெரியும். என்ன நடந்தாலும் சரி, இனி நீ கமலாவைத் தொடக்கூட முடியாது! வீண் பிரச்சினைகள் வேண்டாம்! நீ இந்த ஊரில் இல்லாமல் எங்காவது போய் ஆறுமாதங்களோ ஒரு வருடமோ இருந்துவிட்டு வா! உனக்கு ஐயாயிரம் ரூபாய் தரலாம்'' என்றாள் அவள்.

எனது கண்கள் அகல விரிந்தன.

''நீ இந்த ஏற்பாட்டுக்குச் சம்மதிக்காவிட்டால், அவருக்கு இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்த்துக் கொள்வது என்பது தெரியும்! அவர் எதற்கும் துணிந்தவர்! அதை மறந்து விடாதே!'' என்றாள்.

''ஒரு நிபந்தனை'' என்றேன் நான்.

''ஐயாயிரத்துக்கு அதிகமாக ஒரு சதம்கூட தரமாட்டேன்'' என்றாள்.

''செக் வேண்டாம் நோட்டாகத் தர முடியுமா?'' என்றேன்.

''நோட்டாகவே இருக்கிறது. நீ எடுத்துக்கொள்ளலாம். உன்னை மாட்டி வைக்கக்கூடியதாக சில கடிதங்களை தயார் பண்ணி வைத்திருக்கிறேன். அவற்றில் கையெழுத்துப் போட்டுவிட்டு பணத்தை எடுத்துக்கொள்! வேறு எங்காவது போய் உனது இஷ்டம்போல அனுபவி! கமலாவோடு எதுவித தொடர்பும் கொள்ள முயற்சிக்

காதே! அடுத்த முறை எங்கள் நடவடிக்கை இப்படி இருக்காது!'' என்றாள் அவள்.

அவள் காட்டிய பத்திரங்களில் கையெழுத்துப் போட்டுவிட்டு, மிகவும் மிகவும் கவனமாக சி. ஜகதீசன் என்று கையெழுத்துப் போட்டுவிட்டு, அவள் தந்த பணத்தைப் பெற்றுக் கொண்டு அங்கிருந்து வெளியேறினேன்.


அங்கிருந்து வெளியேறிய எனக்கு, எனது அதிர்ஷ்டத்தை நினைக்க சிரிப்புத்தான் வந்தது.

சிரிப்பு வராமல் என்ன செய்யும்?

திருடுவதற்காக அந்த அறைக்குள் நுழைந்த என்னை, கமலாவின் காதலன் ஜகதீசன் என்று நினைத்துக் கொண்டு, எனது கையில் ஐயாயிரம் ரூபாவைத் தூக்கித் தந்தால் நான் சிரிக்காமல் வேறு என்ன செய்ய முடியும்?

---

✣ எழுத்தாளர்களுக்கும் இப்போது மதிப்பு இருக்கத்தான் செய்கிறது! நிறைய வாசிப்பவரும், ஆழமாகச் சிந்திப்பவரும், அழகாக எழுதுபவரும், காரசாரமாக விமரிசனம் செய்பவருமான எழுத்தாளர் க. நா. சுப்பிரமணியம் அவர்களை இந்திய அரசாங்கம் கலாச்சாரப் பரிவர்த்தனைத் திட்டத்தின் கீழ் யூகோஸ்லேவியா, கிழக்கு ஜெர்மனி ஆகிய நாடுகளுக்கு அனுப்பி வைத்திருக்கிறது! க.நா.சு. அவர்களுக்குக் கிடைத்த கௌரவம் உண்மையான எழுத்துத் தொண்டுக்குக் கிடைத்த கௌரவமாகும்!



✣ வங்க தேசத்தை அங்கீகரிக்கும் பிரச்சினையின் சாதக பாதகங்களை ஆராய்ந்த இந்திய மந்திரிசபை, ரஷ்யா அமெரிக்கா போன்ற பெரிய வல்லரசுகளின் அங்கீகாரம் கிடைத்தாலொழிய இந்தியாமட்டும் அங்கீகரிப்பது சரியல்ல என்ற முடிவுக்கு வந்திருக்கிறதாம்! இந்திய மந்திரிசபையின் முடிவு என்பது இந்திரா காந்தியின் முடிவுதான்! இந்திரா ஒன்றை நினைத்தால் அதற்கு எதிராக ஏதாவது சொல்லக்கூடியவர்கள் இந்திய மந்திரிசபைக்குள் யாரும் கிடையாது!

✣ ரோஜாப் பூக்களில் இருந்து அத்தர் தயாரிக்கிறார்கள். ஒரு கிலோ அத்தர் தயாரிக்க சுமார் இருபது லட்சம் ரோஜாப் பூக்கள் தேவைப்படுகின்றன.

# ★ ★ ★ ★ கட்டுரைப் போட்டி! ★ ★ ★

**ஈழத்து எழுத்தாளர்களின் புதிய படைப்புகளில் உங்களுக்குப் பிடித்தது எது?**

## பரிசு ரூ. 200/-

- 1-1-1945 க்குப் பிறகு பிறந்தவர்கள் அனைவரும் பங்கு பற்றலாம்.
- முடிவு திகதி: 20-9-1971

✣ உங்களுக்குப் பிடித்தமான சிறுகதை, கவிதை அல்லது கட்டுரை ஒன்றைப் பற்றி, ஏன் பிடித்திருக்கிறது என்ற காரணங்களை விளக்கி விமர்சித்து, புதுமையான முறையில் ஒரு கட்டுரை எழுதி அனுப்புங்கள்.

✣ நீங்கள் விமர்சனத்திற்கு எடுத்துக் கொள்ளும் விஷயம், 1-7-70ல் இருந்து 30-6-71 வரையுமுள்ள ஓராண்டு காலப் பகுதியில் ஈழத்திலிருந்து வெளியாகும் பத்திரிகை அல்லது புத்தகம் ஒன்றில் பிரசுரமானதாக இருக்கவேண்டும்.


✣ நீங்கள் எழுதும் விமர்சனக் கட்டுரையின் நீளம் 800 சொற்களுக்கு ('வெள்ளி'யில் சுமார் 4 பக்கங்கள்) உட்பட்டதாகவே இருக்கவேண்டும்.

✣ 1-1-45 தேதிக்குப் பின்னர் பிறந்தவர்களே இந்தப் போட்டியில் பங்கு பற்றலாம். வயதெல்லையை நிரூபிக்கும் பொருட்டு பாடசாலை அதிபர், கிராமசேவகர் அல்லது ஜே. பி. ஒருவரின் சான்றிதழை இணைத்து அனுப்பவேண்டும்.

✣ பரிசுத் தொகை ரூபா 100 ரொக்கப் பணமாகவும், ரூபா 100க்கு ஈழத்து எழுத்தாளரின் நூல்களாயும் வழங்கப்படும்.

✣ கட்டுரை கிடைக்கவேண்டிய கடைசித் தேதி 20-9-1971.

✣ தபால் உறையின் மீது 'வெள்ளி' 30ம் பக்கத்தில் வெளியாகியுள்ள முகவரியையே வெட்டி ஒட்டி அனுப்பவேண்டும்.



✣ விளக்கு அணையும்போது சுடர்விட்டு எரிந்துவிட்டு அணைவது வழக்கம், இதைப் போலவே, செனட்சபையும் அதன் அழிவுக்காலம் நெருங்கும் நேரத்தில் பிரமாதமாக அமர்க்களப்படுத்துகிறது! அரசாங்கம் கொண்டுவந்த ஞாயிறு விடுமுறை திட்டத்தை செனட்சபை எவ்வளவு தூரம் இழுத்தடிக்க முடியுமோ அவ்வளவு தூரம் இழுத்தடித்து விட்டது. ஆனால் செனட்சபையின் முட்டுக்கட்டைகளையும் மீறி அரசாங்கம் ஞாயிறு விடுமுறைத் திட்டத்தை செயல்படுத்தத் தொடங்கிவிட்டது இதற்காக அரசாங்கத்தை எவ்வளவு தூரம் பாராட்டினாலும் தகும்! செனட்சபையிலுள்ள பெரும்பாலான யூ. என். பி உறுப்பினர்கள் டட்லியின் ஆதரவாளர்கள்! ஜே. ஆர். ஜெயவர்த்தனவின் மதியூகம் இவர்களுக்கு இருந்திருந்தால் இப்படி நடந்திருக்க மாட்டார்கள்!

✣ குத்துச்சண்டை வீரர் ஜோ லூயியை ஒரு நிருபர் கேட்டார்; ''உங்கள் வாழ்க்கையிலேயே உங்களைப் பலமாக அடித்தவர் யார்?'' ஜோ கொடுத்த பதில்! ''வருமானவரி அதிகாரி!''


✣ உலகத் தமிழ் இளைஞர் பேரவையின் இலங்கை அமைப்பாளரும், அரசகரும மொழித் திணைக்களத்தில் மொழிபெயர்ப்பாளராக இருப்பவருமான க. நவசோதி மிகவும் துடிப்புள்ள இளைஞர்; முயற்சி மிகுந்தவர்! இவர் பல்கலைக் கழகத்தில் நிகழ்த்திய சொற்பொழிவு ஒன்று ''பல்லவர் காலமும் பக்திக் கோலமும்'' என்ற பெயரில் ஒரு சிறு பிரசுரமாக வெளிவந்து இருக்கிறது! இந்தப் பிரசுர விற்பனையிலிருந்து கிடைக்கும் பணம், குறிஞ்சிக் குமரன் கோயில் நிதிக்காகப் பயன்படுத்தப்படுமாம்! பல்கலைக் கழகத்தை விட்டு வெளியேறி கொழும்பு வாழ்க்கையை மேற்கொண்ட பின்னரும், பேராதனையிலுள்ள குறிஞ்சிக் குமரனை நினைந்து செயல்படும் இந்த இளைஞரின் பண்பு பாராட்டுக்கு உரியது!

✣ இந்திய நாட்டில் உள்ள எந்தப் பல்கலைக் கழகமும் ஒரு குறிப்பிட்ட பிராந்திய மொழியை மட்டுமே பிரத்தியேகப் பயிற்று மொழியாகவும், பரீட்சை மொழியாகவும் வைப்பது அரசியல் சட்டத்துக்கு முரணானது என்று இந்திய உயர்நீதி மன்றம் தீர்ப்பு அளித்துள்ளது. பஞ்சாப் மாநிலத்தில், கல்லூரிகளில் புகுமுக வகுப்பு மட்டத்தில் 'குர்முகி' மொழியை மட்டுமே பிரத்தியேக மொழியாக ஆக்கியதை எதிர்த்து ஒருவர் வழக்குத் தொடுத்திருந்தார்; அதன் விளைவாகவே இந்தத் தீர்ப்பு.


✣ அரசியலில் கட்சிமாறுபவர்கள் தொகை சமீபகாலத்தில் இலங்கையிலும் மிக அதிகரித்துவிட்டது! உண்மையான அரசியல் கொள்கைகளுக்காக கட்சி மாறுவதில் தவறேதும் இல்லை; ஆனால், தங்களுடைய சொந்த நலன்களுக்காக, அற்ப சொற்ப லாபங்களைப் பெறுவதற்காகக்கூடப் பலர் கட்சி மாறிக்கொண்டிருக்கிறார்கள். இவர்களால் அரசியல் நாறுகிறது!

✣ மூவாயிரத்துக்கும் அதிகமான தீவுகளைக் கொண்ட நாடு இந்தோனேஷியா; நீண்டகாலம் இது டச்சுக்காரர்களின் ஆதிக்கத்தில் இருந்து வந்தது. நீண்ட போராட்டத்திற்குப் பின்னரே இந்த நாடு சுதந்திரம் அடைந்தது. சுதந்திர இந்தோனேஷியாவை உருவாக்குவதில் கடுமையாக உழைத்தவர்களில் குறிப்பிடத்தக்கவர் சுகர்ணோ. இவர் தனது பதினான்காவது வயதிலேயே அரசியலுக்கு வந்தவர். சுதந்திர இந்தோனேஷியாவின் ஜனாதிபதியாக நீண்டகாலம் கடமையாற்றிய சுகர்ணோ தனது கடைசிக் காலத்தில் மிகவும் சீரழிய வேண்டி ஏற்பட்டது. பெண் பித்துப் பிடித்து அலைந்ததும், பதவியைத் துர்ப்பிரயோகம் செய்ததும்தான் இவரது சீரழிவுக்குக் காரணமாகும்.

✣ நௌகாங்கில் வாழும் அங்காமி நாகர்கள் கிராமத்தில் ஒரு பெரிய மனிதர் இறந்துவிட்டால் மூன்று நாட்களுக்கு தங்கள் கிராமத்தை விட்டு அகல மாட்டார்கள். பெரிய விருந்து படைப்பார்கள்; உடலை மயானத்தில் புதைத்து சமாதி கட்டுவார்கள்; போர் உடை அணிந்து, பலத்த கூக்குரல் இட்டுக் குதித்தபடியே, "எந்த ஆவி வந்து உன் உடலிலிருந்து உயிரைப்பறித்துச் சென்றது? வேல்களினால் அதனைக் கொன்று விடுவோம்!" என்று கூறி வேல்களையும் வாள்களையும் தரையில் குத்துவார்கள்; மரணமடைந்தவரின் வாள், வேல், கேடயம் முதலிய உடைமைகளை அவரோடு சமாதியில் வைத்து விடுவார்கள்! உலகம் பலவிதம்-ஒவ்வொருவர் மதியிலும் ஒவ்வொரு வகையான சம்பிரதாயம்!



✣ சிவாஜி நடித்த 'தெய்வ மகன்' என்ற படம் சமீபத்தில் இலங்கையில் திரையிடப்பட்டது; ஒரு தந்தையாகவும் அவருடைய இரண்டு பிள்ளைகளாகவும் இந்தப் படத்தில் மூன்று பாத்திரங்களை ஏற்று சிவாஜி நடித்திருக்கிறார்; நடிப்பா அது? 'ஓவ'ருக்கும் மேலே ஓவர்! இந்தப்படத்தை ஆஸ்கார் பரிசுக்காக அனுப்பினார்களாம். நல்லவேளை, ஆஸ்கார் பரிசு தப்பிப் பிழைத்தது! இப்படிக்கண்டபடியெல்லாம் நாட்டுக்கூத்து ஆடிக்கொண்டிருந்தால் நடிகர்திலகத்தின்பெருமை மிக விரைவில் சரிந்துவிடும்!



✣ 'நாட்டியக் கலாப மயில்' என்று அழைக்கப்படுபவர் லீலா நாராயணன்! இவர் நடித்த சினிமா எதுவும் வெளிவருவதற்கு முன்னமேயே ஓரளவுக்கு "ஸ்டார் வால்யூ" பெற்றுவிட்ட ஈழத்துச் சினிமா நடிகை! இவர் கதாநாயகியாக நடித்துள்ள "குத்துவிளக்கு" திரைப்படம் முடிவடையும் தறுவாயில் இருக்கிறது! இவரது புகழ் மங்குமா அல்லது பொங்குமா என்பது "குத்துவிளக்கு" திரையிடப்பட்டவுடன் தெரிந்துவிடும்!


✣ மகாபாரதத்தில் ஒரு சிறு பாத்திரமாக வருகின்ற சிசுபாலனைக் கதாநாயகனாக வைத்து ஒரு நாடகம் தயாரித்து இருக்கிறார் சினிமா நடிகர் மனோகர்! பாரதம், பாகவதம், நாரத புராணம், அபிதானசிந்தாமணி, விஷ்ணு புராணம், வில்லி பாரதம் முதலிய நூல்களிலிருந்து இந்த நாடகத்துக்கான கதையைத் திரட்டி இருக்கிறார்கள்! இந்த நாடகத்தின் முதல் காட்சியில் நிஜமான ஒரு மலைப்பாம்புடன் சண்டை போடுகிறார் மனோகர். தனதுவழக்கம் போலவே, புதிய ஒரு கோணத்தில் ஆராய்ச்சி செய்து இந்த நாடகத்திலும் கெட்டவனான சிசுபாலனை நல்லவனாகக் காட்ட முயன்று இருக்கிறார் மனோகர்!

# இலங்கைப் பல்கலைக் கழகத்தில் ஒழுங்கீனங்கள்?

✣ இலங்கைப் பல்கலைக் கழகத்தில் தகுதிவாய்ந்த அதிகாரியாக பேராதனையில் கடமையாற்றிய பேராசிரியர் ஏ. டி. பீ. ஜயதிலகா கல்விமந்திரி பதியுதீன் மஹ்மூதுக்கு அனுப்பியுள்ள அந்தரங்கமான அறிக்கையொன்றில் பல்கலைக்கழகத்தில் நிகழ்ந்திருக்கக்கூடிய ஒழுங்கீனங்கள், துர்நடவடிக்கைகள், மோசடிகள் ஆகியன குறித்து விசாரிக்க ஒரு ரோயல் கமிஷன் நியமிக்கும்படி கேட்டிருக்கிறார்.

ஆராய்ச்சியொன்றுக்காக தற்சமயம் அமெரிக்கா சென்றுள்ள டாக்டர் ஜயதிலகா தாம் பதவி வகித்த காலம் உட்பட ஆகக் குறைந்தது பத்துவருட காலத்தை உள்ளடக்கிய விசாரணையை மேற்படி கமிஷன் மேற்கொள்ள வேண்டுமென்று கேட்டிருக்கிறார்.

ரோயல் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட்டால் பல பேராசிரியர்களைப் பற்றிய சுவையான சங்கதிகள் பல சந்திக்கு வரும் என்பதை நாங்கள் நிச்சயமாக நம்பலாம்!



பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகளின் சூழ்ச்சியிலிருந்து பிறந்ததுதான் பாகிஸ்தான்!

ஜனாப் ஜின்னு பதவி ஆசையால் உந்தப்பட்டு, ஏதோ கோஷம் போட்டாரே தவிர, அவருக்கே பாகிஸ்தான் என்ருல் என்ன என்று ஒரு திட்டமான கொள்கை இருக்கவில்லை. தெளிவான வடிவம் கொடுத்தவர்கள் பிரித்தானிய ஏகாதிபத்திய வாதிகள்தான்!

1500 மைல்களுக்கு மேல் இடைவெளி உள்ள இரு பிரதேசங்கள் ஒரே நாடாக அமைவது என்பது மகா முட்டாள்தனமான திட்டம்!

வெகு தூரத்தில் உள்ள இரு வேறு பிரதேசங்களில் வாழ்கின்ற மக்கள், இரு வேறு மொழிகளைப் பேசுகின்ற மக்கள், இரு வேறு கலாச்சாரப் பாரம்பரியங்களுக்கு உரிய மக்கள், ஒரே

சாமிஜி

# வங்காள மக்களுக்கு கிடைத்துள்ள புதிய பலம்!

நாடு என்ற அடிப்படையில் எப்போதும் கட்டுண்டு இருப்பார்கள் என்று எதிர்பார்ப்பது மகா அபத்தமான காரியம்!

ஆனல், 1947-ம் ஆண்டில் பாகிஸ்தான் பிறந்தபோது, "நாங்கள் எல்லாரும் முஸ்லிம்கள்" என்ற தீவிர உணர்ச்சியும், அரசியல்வாதிகளின் பொய்ப் பிரச்சாரங்களும் இந்தப் பேதங்களை எல்லாம் திரை போட்டு மறைத்தன.

இந்தத் திரை விலகுவதற்கு நீண்ட நாட்கள் பிடிக்கவில்லை.

பாகிஸ்தான் உருவாகி சில நாட்களுக்குள்ளேயே, மேற்கு பாகிஸ்தானில் உள்ள பஞ்சாபிகளின் சுயரூபம் கிழக்கு பாகிஸ்தானில் உள்ள வங்காளிகளுக்கு தெளிவாக விளங்கியது!

மேற்கு பாகிஸ்தானின் மக்கள் தொகையைவிட கிழக்கு பாகிஸ்தானில் உள்ள மக்கள் தொகை 140 லட்சம் கூடுதலானது. பாகிஸ்தானுக்கு அந்நியச் செலவாணியைத் தேடித் தரும் சணல் முதலிய பொருள்கள் கிழக்கு பாகிஸ்தானில் தான் விளைகிறது.

ஆனல், பாகிஸ்தானின் ஆட்சிப் பொறுப்பில் கிழக்கு பாகிஸ்தானியர்களுக்கு உரிய பங்கைக் கொடுக்க மறுத்து வந்தனர் மேற்கு பாகிஸ்தானியர்! பாகிஸ்தானின் ஆட்சிப் பீடம் மேற்கு பாகிஸ்தானிலுள்ள ஒரு சில குடும்பங்களின் கைவசமே தொடர்ந்து இருந்து வந்தது;

இவர்கள் கிழக்கு பாகிஸ்தானை ஒரு குடியேற்ற நாடுபோலவே நடத்தி வந்தனர். கிழக்கு வங்கத்தினர் இரண்டாந்தரப் பிரஜைகளாகவே நடத்தப்பட்டனர்!

அரசாங்க உத்தியோகம், தொழில் துறை, ஏற்றுமதி, இறக்குமதி எல்லாவற்றிலும் மேற்கு பாகிஸ்தானியர்களே வியாபித்துக்கொண்டார்கள்.

இது சென்ற பத்து ஆண்டுகளாக கிழக்கு வங்காளிகளின் மனத்தை உறுத்திக்கொண்டே வந்தது!

கிழக்கு வங்காளிகளின் மனக்கசப்பு, ஆசாபாசம், லட்சியம் முதலியவற்றுக்கு இலக்கணமாக வந்து குதித்தார் ஷேக் முஜிபுர் ரெஹ்மான்!

அண்மையில் நடந்த தேர்தலில் இவருடைய கட்சி வரலாறு காணாத பெருவெற்றி பெற்றது. இவருடைய நியாயமான கோரிக்கைகளுக்கு பாகிஸ்தான் ஆட்சியாளர்கள் உடன்பட்டு இருந்தால், இன்று வங்காள தேசம் என்ற பேச்சுக்கே இடம் ஏற்பட்டிருக்காது!

வங்காளிகளின் தன்மான உணர்வைத் தட்டிக் கழித்து விடலாம் என்று நினைத்தார் பாகிஸ்தானின் சர்வாதிகார பீடத்தில் அமர்ந்துள்ள ஜெனரல் யாஹியாகான்! இவருக்குத் தூபம் போட்டார்கள் பூட்டோ போன்ற அரசியல் வாதிகள்!

வங்காளிகள் தன்மான உணர்வு மிகுந்தவர்கள்; மொழிப்பற்று மிக்கவர்கள்! இலட்சியத்துக்காக வாழ்ந்து உலகப் புகழ் எய்திய கவிஞர் தாகூரின் மரபிலே வந்தவர்கள்! ஆணனப்பட்ட பிரிட்டிஷ் சாம்ராஜ்யத்தையே படைகொண்டு எதிர்க்கத் துணிந்த சுதந்திரவீரன் சுபாஷ் சந்திரபோஸின் வழித்தோன்றல்கள்! இவர்களா சுண்டைக்காய் யாஹியாகானின் மிரட்டல்களுக்கு பயந்து விடுபவர்கள்?

ஷேக் முஜிபுர் ரெஹ்மானின் தலைமையில் கிழக்கு வங்காளத்தினர் ஒத்துழையாமை இயக்கம் தொடங்கினார்கள். அதனைப் படைகொண்டு அடக்கிவிடலாம் என்று நினைத்தார் யாஹியாகான்! அதுவே சுதந்திர வங்காளம் பிறப்பதற்கு காரணமாயிற்று!

யாஹியாகானின் ராணுவ ஆட்சி, ஷேக் முஜிபுர் ரெஹ்மானையும் மற்றும் தலைவர்களையும் கைதுசெய்து சிறையில் அடைத்ததோடு நில்லாமல், கிழக்கு வங்கத்தில் வெறியாட்டம் ஆடத் தொடங்கியது! என்ன செய்தும் வங்காளிகளின் சுதந்திர உணர்வு அடங்கவில்லை!

வங்காள தேசப் பிரச்சினை இப்போது உலகப் பிரச்சினையாக மாறியிருக்கிறது! வங்காளத்திலிருந்து வெளியேறி இந்தியாவுக்குள் புகுந்திருக்கும் கோடிக் கணக்கான அகதிகளின் பிரச்சினை இப்போது உலகப் பிரச்சினையாக மாறியிருக்கிறது! இந்தியாவுக்கும் பெரும் தலைவலி தரும் பிரச்சினையாக மாறியிருக்கிறது வங்காளதேசப் பிரச்சினை!

இத்தனைக்கு இடையில்,

விசாரணை என்ற பெயரில், ரகசியமாக ஏதோ நாடகமாடி, ஷேக் முஜிபுர் ரெஹ்மானைத் தீர்த்துக் கட்டுவதற்கான நட-



✣ சென்னையில் நடந்த கூட்டம் ஒன்றில் பேசும்போது "மத உணர்ச்சிகளைப் புண்படுத்துவது சட்ட விரோதம் எனக் கூறும் சட்டத்தை மாற்றவேண்டும்" என்று பெரியார் பேசி இருக்கிறார்! ரொம்பவும் திமிர்த்தனமான பேச்சு இது! கருணாநிதியைப் பாராட்டுவதற்காக நடைபெற்ற ஒரு கூட்டத்தில்தான் பெரியார் இப்படிப் பேசி இருக்கிறார்! ஆட்சியில் உள்ளவர்களை அண்டிப் பிழைப்பதுதான் பெரியாரின் தொழில்! இவர் நினைத்துக் கொண்டிருக்கலாம் "கருணாநிதி நம்ம ஆள்" என்று! ஆனால், கருணாநிதி இவரை நன்கு அறிவார்! ஒரு சிலரை, ஒரு சில சமயங்களில் மட்டந் தட்டுவதற்கு இவர் கேடயமாகப் பயன்படுவார் என்ற காரணத்தினால் தான் கருணாநிதி இவரை ஒரு சில சமயங்களில் தட்டிக்கொடுத்து வருகிறார்.

வடிக்கைகளில் இறங்கியிருக்கிருர் யாஹியாகான்!

நாகரிக நாடுகளில் வாழும் மனிதாபிமானமும் மிக்க மக்கள் அத்தனை பேருமே யாஹியா கானின் இந்த வி.சாரணை நாடகத்திற்கு எதிராகக் குரல் எழுப்பி இருக்கிருர்கள்!

ஆனல்

இந்த விஷயத்தில்

சீன அரசாங்கமும், அமெரிக்க அரசாங்கமும் தங்களுக்கு லாபம் தரும் நடவடிக்கை எது என்பது பற்றிச் சிந்திக்கின்றனவே தவிர, ஒரு சிறிதும் மனிதாபிமானத்துடன் நடந்து கொள்ளவில்லை!

சீனுவினதும் அமெரிக்காவினதும் ஆதரவு தனக்குத்தான் என்ற துணிச்சலில் பாகிஸ்தானின் ராணுவ ஆட்சியும் மேலும் மேலும் திமிராகவே நடந்து கொள்கிறது:

இந்தியப் பிரதமர் இந்திரா காந்தியின் விசேஷ தூதுவராக, வங்காளதேச மக்களின் பிரச்சினையை மற்றைய நாட்டு அரசாங்கங்களுக்கு விளக்கிச் சொல்லி, அதற்கு ஆதரவு தேடுவதற்காக, இந்திய வெளி விவகார அமைச்சர் சர்தார் சுவரண்சிங், உலகின் பல பாகங்களுக்கும் சென்று வந்திருக்கிருர்! இந்தச் சுற்றுப் பயணத்தின் பலன்......

**'வெள்ளி'**
226, காங்கேசன்துறை வீதி,
யாழ்ப்பாணம்.

பொறுத்திருந்துதான் பார்க்கவேண்டும்!

ஆனல்,

சீனு, அமெரிக்கா, பாகிஸ்தான் ஆகிய நாடுகளின் பேராசை - நூற்றுக்கு நூறு வீதமான சுயநலப்போக்கு - சுதந்திர வங்காளத்துக்கு ஒரு வாய்ப்பாக வந்திருக்கிறது!

அமெரிக்க ஜனதிபதி நிக்ஸனின் பிரதம ஆலோசகரான கிஸ்ஸிங்கர், சீனத் தலைவர்களோடு பேச்சு வார்த்தைகள் நடத்துவதற்கு வழி செய்து கொடுத்தது பாகிஸ்தான்! இதன் பயனுக, இதுவரை காலமும் வங்காள தேசப் பிரச்சினையில் ஏனேதானேவென்று இருந்த சோவியத் அரசாங்கம் இப்போது ஒரு புதிய கண்ணேட்டத்துடன் செயல்படத் தொடங்கியிருக்கிறது! இந்தக் கண்ணேட்டத்தின் முதற்படிதான் சோவியத் அரசாங்கத்திற்கும் இந்திய அரசுக்கும் இடையில் ஏற்பட்டுள்ள புதிய பாதுகாப்பு உடன்படிக்கை!

இந்த உடன்படிக்கை இந்தியாவிற்கு ஒரு புதிய பலத்தைத் தந்திருக்கிறது. இந்த உடன்படிக்கையை இந்தியப் பிரதமர் இந்திரா காந்திக்கும், இந்திய வெளிவிவகார அமைச்சர் சர்த்தார் சுவர்ண் சிங்கிற்கும் ராஜதந்திர ரீதியில் கிடைத்த வெற்றி என்றே கூறவேண்டும்! பலம் பொருந்திய இந்தியாவினல்தான் வங்காள மக்களின் சுதந்திரப் போராட்டத்திற்கு வேண்டிய உதவிகளைத் தரமுடியும்!

# ஐந்தாம் வகுப்பு

## மூன்ருந் தவணைக்குகந்த பயிற்சிநூல்கள்

எழுதியவர்: திருமதி பத்மா சோமகாந்தன்

| | | |
|---|---|---|
| மாதிரி விஞப்பத்திரங்கள்—தமிழ்மொழி | சதம் | 70 |
| மாதிரி விஞப்பத்திரங்கள—சூழல் | சதம் | 70 |
| மாதிரி விஞப்பத்திரங்கள்—கணிதம் | சதம் | 70 |
| மாதிரி விஞப்பத்திரங்கள்—சைவசமயம் | சதம் | 70 |
| மாதிரி விஞப்பத்திரங்கள்—ஆங்கிலம் | சதம் | 70 |

**வரதர் வெளியீடு**

226, காங்கேசன்துறை வீதி,

யாழ்ப்பாணம்.

நம்பிக்கை

நாணயம் மிக்க

தங்க, வைர நகைகளை

வாங்கவும்

நீங்கள் விரும்பிய டிசைன்களில்

ஓடர் கொடுக்கவும்

ராணி

ஆபரண மாளிகை

கண்கவர் டிசைன்களை கவர்ச்சிகரமாக

அமைக்கிறார்கள்!

RANEE JEWELLERS

224, கே. கே. எஸ். வீதி : : யாழ்ப்பாணம்

அச்சிட்டு வெளியிட்டவரும், ஆசிரியரும்: தி. ச. வரதராசன்

அச்சு: ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.